# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 33 February - 2020 Issue -2**


**நிறுவன ஆசிரியர் உரை**

## ஒரு கிறிஸ்தவன் இரட்சிப்பை இழந்து விடும் அபாயம் உண்டா?

உண்மையாகவே, இது ஒரு முக்கியமான, சிந்திக்க வேண்டிய கேள்வி. இதற்குப் பரிசுத்த வேதாகமத்திலிருந்து விடை காண முயலுவோம். அப்போஸ்தலனாகிய பவுலும், பேதுருவும், யோவானும், யாக்கோபும், யூதாவும் எழுதின நிருபங்கள் யாவுமே கிறிஸ்தவர்களுக்கு கூறப்பட்ட அறிவுரைகள் மற்றும் எச்சரிப்புகளே. இந்தப் பரிசுத்த வேதாகம எழுத்தாளர்கள் ஒவ்வொருவருமே ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் கிறிஸ்தவர்கள் வீழ்ந்து போகும் அபாயத்தைக் குறித்து எச்சரித்துப் புத்தி சொல்லியிருக்கிறார்கள். இந்த எச்சரிப்புகள் சிலவற்றை வாசித்து தியானிப்போம்.

மரணத்துக் கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும் எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ அதற்கு கீழ்ப்படிககிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?'' [ரோமர் 6:16] இதில் பவுல் அப்போஸ்தலன் தெளிவாகச் சொல்லியிருப்பது என்னவெனில்: ஒரு கிறிஸ்தவன் மனப்பூர்வமாக பாவத்துக்கு அடிமையாகி விட்டால் மரணம் நிச்சயம் என்கிறார். மரணம் என்று இங்கே கூறப்படுவது சரீர மரணத்தையல்ல. தேவனிடத்திலிருந்து நம்மை சதாகாலத்துக்கும் பிரித்து வைக்கிற இரண்டாம் மரணத்தையே குறிக்கிறது. மேலும் ரோமர் 8:6 ல் ''மாம்ச சிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்''

என்கிறார். அப்போஸ்தலன் பவுல், இந்த எச்சரிப்பை கொரிந்தியருக்கு விடுக்கும்போது இன்னும் கொஞ்சம் அதிகக் கடுமையைக் கூட்டியிருக்கிறார். ''அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா?'' (1கொரி 6:9) நினைவில் வையுங்கள், கொரிந்து பட்டணத்தில் இந்த நிருபத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் கிறிஸ்தவர்கள்.

ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர்கள் எந்த சூழ்நிலையிலும் மீண்டும் அதை இழந்து போவதில்லை என்று போதித்து, கிறிஸ்தவர்கள் தங்களுடைய எஞ்சிய வாழ்க்கையைக் கர்த்தருக்குப் பிரியமாய் வாழ வேண்டிய அவசியத்தை அலட்சியப்படுத்தத் தூண்டுபவர்களை அப்போஸ்தலன் யூதா சொல்வதைக் கவனித்துப்படிக்க வேண்டுகிறேன். **நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில் கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாத வர்களை அழித்தார்** (யூதா: 5). இதைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் கொரிந்து பட்டணத்துக்கு எழுதிய நிருபத்தில், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் செய்த மக்களை எவ்வாறு கர்த்தர் அழித்துப் போட்டார் என்று விளக்குகிறார். (1கொரி 10:1-10) அந்த நிகழ்ச்சி எல்லாக் காலத்துக் கிறிஸ்தவர்களுக்கும் எச்சரிக்கையாக இருக்கும்படி அதைக் கீழ்காணும் எச்சரிப்போடு முடிக்கிறார். **இப்படியிருக்க தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.** (1கொரி 10:12).

மேலும், தங்கள் உபதேசத்தாலும், வாழ்க்கையாலும் கிறிஸ்துவினிடத்தில் அன்பும், மதிப்பும் இல்லாமல் கிறிஸ்தவ அறத்துக்கு இழுக்குண்டாக்கிக் கொண்டிருப்பவர்களைக் குறித்து பிலிப்பு பட்டணத்திலுள்ள சபையாருக்குப் பவுல் எழுதும்போது **சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்.**

ஏனெனில், அநேகர் வேறு விதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்கிறேன்.

அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலட்சையே அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் [பிலி. 3:17–19] **குறித்துக் கொள்ளுங்கள்** அவர்களுடைய முடிவு அழிவு.

எபிரெய நிருபமும் கிறிஸ்தவர்கள் பாவத்திற்கும், அவிசுவாசத்துக்கும் ஆளாகி, இரட்சிப்பை இழந்து விடக் கூடாது என்று எச்சரிக்கிறது. **சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடி நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்** [எபி 3:12]. என்ன இப்படிச் சொல்கிறாரே, ஒரு கிறிஸ்தவன் ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான சாத்தியக் கூறுகள் உண்டாகுமா? என்று சந்தேகப்படுகிறவர்களுக்கு, **கண்டிப்பாக அப்படி நடக்கும்** என்று அடித்துக் கூறுவதுமன்றி, அப்படிப்பட்டவர்களுடைய கதி என்னவாயிருக்கும் என்றும் கூறுகிறார். ஏனெனில், ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும். தேவனுடைய நல்வார்த்தையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்தும். மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்து கிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம். [எபி 6:4–6].

மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவர்கள் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னை பரிசுத்தம் செய்த உடன்பக்கையின் இரத்தத்தைத் அசுத்தமென்றெண்ணி கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள் [எபி 10:26–29] என்று நம் சிந்தனையைத் தூண்டுகிறார். அன்பானவர்களே, மேற்கூறிய வசனங்கள் கிறிஸ்துவை அறியாத அஞ்ஞானிகளுக்குச் சொல்லப்பட்டதல்ல. நாம் என்றிருப்பதால் இது கிறிஸ்தவர்களையே சுட்டிக்காட்டுகிறது.

அப்போஸ்தலன் யாக்கோபு, இந்த முக்கியமான விஷயத்தில் தன் நிலையை விளக்காமல் இல்லை. இப்படிப்பட்டவர்களை பார்த்து, ‘‘விபச்சாரரே, விபச்சாரிகளே உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால்

உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்'' என்று சாடுகிறார் [யாக் 4:4] அப்படிப்பட்ட பகைவர்களை தேவன் தம்முடையவர்களாகக் கருதுவாரா? தவறு செய்கிற கிறிஸ்தவர்கள் மீண்டும் சத்தியத்துக்குத் திரும்பி வராவிட்டால் இழப்பு நிச்சயம் என்பதை மற்றுமொரு இடத்தில் யாக்கோபு கூறுகிறார். ''சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால் தப்பிப் போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவான் என்று அறியக் கடவன்'' [யாக் 5:19,20] ஆம் சகோதரரே! தவறு செய்கிற ஒருவனை மீண்டும் சத்தியத்துக்குள் கொண்டு வராவிட்டால் அவன் ஆவியிலே மரித்த நிலையில் இருப்பான் என்று அறிவோமாக!

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களிலேயே, தெரிந்தே பாவஞ்செய்கிற கிறிஸ்தவர்களைக் கடுமையாகச் சாடுபவர் அப்போஸ்தலன் பேதுரு என்று சொல்லலாம். ''ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளைச் செய்தால் [அதாவது அதே அதிகாரம் 5 முதல் 9 வசனங்களில் சொல்லப்பட்டுள்ளவைகளைச் செய்தால்] நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.

இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்ஜியத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்'' [11 பேதுரு 1:10, 11]. இவைகளைச் செய்யாவிட்டால் நீங்கள் இடறி விழுவீர்கள் என்றாகிறதில்லையா? மறுதலித்துப் போகிற கிறிஸ்தவர்களை ''கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப் பட்டால் அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமைகளிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின் படியே அவைகளுக்குச் சம்பவித்தது. [11பேதுரு

2:20–22). அப்போஸ்தலன் தான் சொல்ல வந்த கருத்தை வலியுறுத்துவதற்காக அவர் சாதாரண சூழ்நிலையில் சொல்லக் கூச்சப்படக்கூடிய ஒரு பழமொழியை மேற்கோள்காட்டி, சத்தியத்தை அறிந்த பிறகு தவறு இழைக்கிற மக்களின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இது விஷயத்தில் அப்போஸ்தலன் யூதாவும் மௌன மாயிருக்கவில்லை. **வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே**

**உங்களை நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் இப்பொழுதும் எப்போதும் உண்டாவதாக, ஆமென்.** (யூதா 24,25).

அப்போஸ்தலன் யோவானும் இது விஷயத்தில் இவர்களுடைய கருத்தை ஆமோதித்துக்கீழ்வருமாறு எழுதுகிறார். ''அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான்; அவனுக்குள் சத்தியமில்லை.'' (1யோவா 2:4). அப்படிப் பொய் சொல்லித் திரிகிறவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று அவர் வேறு ஒரு இடத்தில் கூறுகிறார், கேளுங்கள், ''பயப்படுகிறவர்களும், விக்கிரக ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' (வெளி 21:8).

சகோதரர்களே, மேலே எடுத்து ஆளப்பட்ட வேத வசனங்களையெல்லாம் வாசித்துச் சிந்தித்த பிறகு, கிறிஸ்துவை மறுதலித்து மீண்டும் அவரைச் சிலுவையில் அறைந்து அவரை பகிங்கரமாக வெட்கப்படுத்துகிற போலிக் கிறிஸ்தவர்கள் மீது தேவன் பிரியமாய் இருக்கமாட்டார் என்று ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

ஒப்புக் கொள்வதோடு நின்று விடாதீர்கள். உங்கள் வாழ்க்கையை செப்பனிடவும், அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும், உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவும் கிறிஸ்தவ அன்புடன் வேண்டி, மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். ✝

# கர்த்தருடைய ஜெபம்

Bro. J.C. **சோட்**

மத்தேயு 6:5–15 வசனங்களில் இயேசு கிறிஸ்து ஜெபத்தைக் குறித்து பல்வேறு பாடங்களை கற்றுத் தந்திருக்கிறார். இங்கே சூழல் என்னவென்றால், மலைப் பாங்கான பகுதி, திரளான ஜனங்கள் அங்கே கூடியிருக்கிறார்கள், அதிலும் குறிப்பாக, சீஷர்கள் கூடி இருந்தார்கள். மலைப்பிரசங்கத்தின் ஊடே நம் ஆண்டவர் ஜெபத்திற்கான உதாரணத்தைக் கொடுத்தார். இது கர்த்தருடைய ஜெபம் என்று பொதுவாக அழைக்கப்படுகிறபடியால் இதற்கு சிறப்பு கவனம் கொடுக்க நாம் விரும்புகிறோம்.

முதலாவது, இயேசு கிறிஸ்து சீஷர்களுக்கு எப்படி ஜெபிக்கக்கூடாது என்று கற்றுக் கொடுத்தார். அன்றியும் நீ ஜெபம் பண்ணும் போது, மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம். மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும், வீதிகளின் சந்துகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன் என்று அவர் சொன்னார் (மத்தேயு 6:5). இங்கே மாயக்காரர் என்பது நடிப்பவர்களை, பாசாங்கு செய்பவர்களைக் குறிக்கிறது. வேறு விதமாகச் சொன்னால், அவர்கள் உண்மை இல்லாதவர்கள், அவர்கள் மனிதர்களால் பார்க்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள், தங்களுடையவைகளை அவர்கள் வெளிக்காட்ட விரும்பு கிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று இயேசுகிறிஸ்து சொல்கிறார். இத்தகைய மனிதர்களை நம் வாழ்க்கையில் பல முறை பார்த்திருக்கிறோம். அவர்கள் பூங்காக்களிலும், பொது இடங்களிலும் நின்று கொண்டு ஜெபம் பண்ணவும் பக்தி ரீதியான காரியங்களில் ஈடுபடவும் விரும்புகிறார்கள். அப்படி செய்யக் கூடாதென்று கிறிஸ்து திட்ட வட்டமாகச் சொல்லிவிட்டார். மனுஷர் காணும்படியாகவோ, கேட்கும்படியாகவோ நாம் ஜெபிக்கக்கூடாதென்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

மத்தேயு 6:6 ல் நம் கர்த்தர் நாம் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று சொல்கிறார். நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி,

அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உங்கள் பிதா வெளியரங்கமாய் பலனளிப்பார். இங்கே கிறிஸ்து நம் நம்முடைய ஜெபம் தேவனால் கேட்கப்படவேண்டுமென்றால் தனிமையான ஓர் இடத்தைத் தெரிந்துகொண்டு, அங்கே போய் நாம் ஜெபிக்க வேண்டுமென்று சொல்கிறார். அப்படி நாம் செய்யும் போது அந்தரங்கத்திலிருக்கிற நம் பிதா வெளியரங்கமாக பதிலளிப்பார்.

நம்முடைய பிதாஆவியாயிருக்கிறார். அவர் காணக் கூடாதவராயிருக்கிறார். அவர் எல்லோரும் காணும் விதத்தில், அல்லது அறிந்து கொள்ளும் விதத்தில் பலனளிப்பார் என்று கிறிஸ்து சொல்கிறார். தொடர்ந்து கிறிஸ்து பேசும் போது இவ்விதமாக எச்சரிக்கிறார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும் போது அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதையுங்கள், அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நினைக்கிறார்கள். அவர்களை போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். (மத்.6:7-8). இவ்வசனப்பகுதியில் அஞ்ஞானிகளைப்போல் ஜெபிக்க வேண்டாமென்று தம்முடைய சீஷர்களை எச்சரித்தார். ஆனால், இவ்விதமாக ஜெபிக்க வேண்டுமென்று கற்றுக்கொடுத்தார்.

இன்று பல சபைகள் இந்த ஜெபத்தை தங்கள் ஆராதனை வேளைகளிலும், கூட்டங்களிலும் பயன்படுத்துவதை நாம் அறிந்திருக்கிறாம். இந்த ஜெபத்தை அவர்கள் ஒரு பாரம்பரியமாக செய்து வருகிறார்கள். திரும்பத் திரும்ப இந்த ஜெபத்தை செய்கிறார்கள். மேலும், இந்த ஜெபத்தில் ராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்க வேண்டுமென்று கிறிஸ்துவால் சீஷர்களுக்கு கற்று கொடுக்கப்பட்டது. அந்நேரத்தில் ராஜ்யம் வரவில்லை. ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு ராஜ்யம் கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்டது. அதிலிருந்து ராஜ்யம் இருந்து வருகிறது. எனவே, இப்போது நாம் ராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கக் கூடாது, அதன் விரிவாக்கத் திற்காக, வளர்ச்சிக்காக ஜெபிக்க வேண்டும். ஒரு ஜெபத்தில் என்னென்ன காரியங்கள் இடம் பெற வேண்டுமென்று சொல்லி தம்முடைய சீஷர்களுக்கு இயேசு கிறிஸ்து ஜெபிக்க கற்றுக் கொடுத்தது சுவாரஸ்யமாயிருக்கிறது, கிறிஸ்து கற்றுக்கொடுத்த மாதிரி ஜெபத்தில் இடம் பெற்றிருந்த இரண்டு அல்லது மூன்று காரியங்களைத் தவிர மற்ற காரியங்கள் இன்றும் கூட நம் அன்றாட ஜெபங்களில் இடம் பெற வேண்டும்.

அவர் அவர்களுக்கு எங்கள் பிதாவே என்று ஜெபிக்கும் படியாக கற்றுக் கொடுத்தார். எனவே, இந்த ஜெபம் பரலோகத்திலிருக்கிற நம் பிதாவாகிய தேவனுக்கு ஏறெடுக்கப்படுகிறது. உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்பது தேவனுக்கு செலுத்தும் மரியாதையைக் குறிக்கிறது.

அவர் ராஜ்யத்திற்காக ஜெபிக்கும்படியாகக் கற்றுக் கொடுத்தார். அந்நேரத்தில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படவில்லை, எனவே, அந்நேரத்தில் அவர்கள் அதற்காக ஜெபித்தது சரியான ஒன்றாகத் தான் இருந்தது.

அவர் தேவனுடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவது போல் பூமியிலும் செய்யப்படுவதாக என்று போதித்தார். தங்கள் விருப்பப்படி காரியங்கள் நடக்கவேண்டுமென்று விரும்பாமல், தேவனுடைய சித்தம் செய்யப்பட வேண்டுமென்று அவர் போதித்தார்.

அவர் அவர்களுடைய அனுதின தேவைகளுக்காக ஜெபிக்க வேண்டுமென்று கற்றுக் கொடுத்தார். இதில் ஆகாரம் மற்றும் வாழ்க்கையின் தேவைகளும் உள்ளடக்கம். மேலும், இது சரீரப்பிரகாரமான தேவைகளுக்காக தேவனைச்சார்ந்திருக்க வேண்டுமென்று நமக்கு உணர்த்துகிறது.

அவர் அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளுக்காக ஜெபிக்கும் படி கற்றுக்கொடுத்தார். இதில் பாவமன்னிப்புக்காக ஜெபிப்பதும் உள்ளடக்கம். ஆனால், அவர்கள் தங்களுக்கு விரோதமாக மற்றவர்கள் செய்த தப்பிதங்களை மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

அவர் வழிநடத்துதலுக்காக ஜெபிக்க வேண்டுமென்று கற்றுக் கொடுத்தார். இதற்குள் சோதனையிலிருந்து இரட்சிக்கும்படியான ஜெபமும் உள்ளடக்கம்.

இயேசு, வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் தேவனுடையவைகள் என்று கற்றுக் கொடுத்தார்.

இது சிறிய ஜெபமாக இருந்தாலும் கூட அர்த்தமுள்ள ஜெபமாயிருக்கிறது. இது நம்முடைய ஜெபமாக இருக்க முடியாதென்றால் நாம் எதற்காகத்தான் ஜெபிக்க வேண்டும்? இது நல்ல கேள்வியாயிருக்கிறது. இந்த நல்ல ஜெபம் அல்லது மாதிரி

ஜெபம் கர்த்தர் கற்றுக் கொடுத்த ஜெபத்திலுள்ள கருத்துக்களை உள்ளடக்கியதாகத்தான் இருக்கும். ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், ராஜ்யம் வருவதாக என்று ஜெபிப்பதற்கு பதிலாக ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக ஜெபிக்க வேண்டும். கடைசியாக, ஜெபத்தை இயேசுவின் நாமத்தில் நிறைவு செய்ய வேண்டும்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜெபத்தை நிறைவு செய்யும் போது இவ்விதமாகச் சொல்கிறார். மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார், மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். இங்கே கிறிஸ்து என்ன சொல்கிறார்? சக மனிதர்கள் நமக்கு விரோதமாக செய்யும் தப்பிதங்களை நாம் அவர்களுக்கு மன்னிக்கவில்லையென்றால், நம்முடைய பாவங்களை தேவன் மன்னிக்கவேண்டுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்? நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்றால், நமக்கு விரோதமாகத் தப்பிதங்களை செய்தவர்களிடத்தில் நாம் மன்னிக்கும் தன்மையைப் பெற்றிருக்க வேண்டும். அப்போது மாத்திரமே நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாயிருப்போம். அதற்குப் பிறகு தான் நாம் தேவனிடத்தில் பாவமன்னிப்பைக் கேட்க முடியும்! ✝

## என்ன விலை கொடுக்கிறோம்?

**தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விலையாகக் கொடுத்தார். ஆகவே, நாம் நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தாலொழிய வேறெந்த பரிசையும் நம்மிடமிருந்து ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**நம் பணம் அல்லது நேரம் அல்லது தாலந்துகளையோ அல்லது உடைமைகளையோ அவர் ஏற்றுக் கொள்வதில்லை. வேதவாக்கியங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிற வைகளை நாம் ஆரம்பத்திலிருந்தே பின்பற்றினால் பத்தில் ஒரு பங்குக்கு குறைவாகக் கொடுக்க நாம் துணிய மாட்டோம்.**

பெண்கள் பகுதி

# ஆண்கள் தலைமைக்கும், பெண்கள் அவர்கள் துணைக்கும்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

ஒரு ஆண்பிள்ளைக்கு, அவனுடைய இளம்பருவத்திற்கான காரியங்கள் மற்றும் பண விஷயங்களில் அவன் கவனமாக இருக்க வேண்டியதின் அவசியம் பற்றிப் போதிப்பதைக் காட்டிலும், அவன் வளரும் போதே, தேவ மனிதனுக்கேற்ற பண்புகளைப் பெற்றுக்கொள்ளும்படி போதிப்பது முக்கியமானது.

அதாவது, தன்னுடைய குடும்பத்திற்கு, அவன் அன்பான ஒரு தலைவனாக இருப்பது பற்றி, தன்னுடைய மனைவிக்கும், பிள்ளைகளுக்குமிடையே, பொறுப்புள்ளவனாக நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கும், உலகத்திற்கும் இடையே நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கு ஆவிக்குரிய தலைவனாக இருப்பது பற்றி, குடும்பத்தில் எடுக்கும் முடிவுகளுக்கு தேவனுக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியம் பற்றியெல்லாம் போதிக்க வேண்டும்.

ஆண்களோடு போட்டியிடும் வண்ணம், இன்றைய பெண் பிள்ளைகளின் பொதுவான வளர்ப்பும், பயிற்சியும் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட அமைப்பினால், பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவருடன் பிரச்சினையை சந்திக்க நேரிடுகிறது. திருமண உறவுக்குள் தன்னை உட்படுத்தும் வேளைக்காக ஆயத்தப்படுத்தவும், தன்னை தெரிந்து கொண்ட (அல்லது தான் தெரிந்து கொண்ட) கணவரின் வாழ்க்கை முழுமையாகச் செய்யவும், தன் குடும்பத்தின் மேல் அன்புள்ளவளாக, கரிசனையுள்ளவளாக இருக்கவும், தேவன் தன் கணவனை தன்னுடைய நலனுக்காகவே உண்டாக்கியிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு பெண்ணிடம் தேவன் எதிர்பார்க்கிறார். நிச்சயமாகவே, தன் கணவனுக்குச் சிறந்த துணையாக அமையவும், தன் பிள்ளைகளை சிறப்பாக வளர்க்கவும் அவள் தன் மனதை தரமான கல்வி அறிவுடன் வளர்க்க வேண்டும்.

கடந்த தலைமுறையில் தாய்மைத்தவம் என்பது பெருமையாகப் பேசப்பட்ட ஒன்றாக இருந்தது. பெண்கள் தங்கள் பிள்ளைகளில் மகிமையடைந்தார்கள். தங்கள் கணவனிமித்தம் புகழ்ச்சி அடைந்தார்கள். தங்கள் திறமைகளை குடும்பத்திற்காகப்

பயன்படுத்துவதை கௌரமாக எண்ணினார்கள். அவர்களெல்லாம், நசுக்கப்பட்டவர்களோ அல்லது வெறுப்படைந்தவர்களோ, கல்லாதவர்களோ, வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களோ அல்ல. தங்களைப்பற்றியும், தாங்கள் என்ன செய்கிறார்களோ அது பற்றியும் மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றி கற்பிக்கப்பட்டிருந்தார்கள்.

கடந்த தலைமுறையில் தாய்மைத்தவம் என்பது பெருமையாகப் பேசப்பட்ட ஒன்றாக இருந்தது. பெண்கள் தங்கள் பிள்ளைகளில் மகிமையடைந்தார்கள். தங்கள் கணவனிமித்தம் புகழ்ச்சி அடைந்தார்கள். தங்கள் திறமைகளை குடும்பத்திற்காகப் பயன்படுத்துவதை கௌரமாக எண்ணினார்கள். அவர்களெல்லாம், நசுக்கப்பட்டவர்களோ அல்லது வெறுப்படைந்தவர்களோ, கல்லாதவர்களோ, வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களோ அல்ல. தங்களைப்பற்றியும், தாங்கள் என்ன செய்கிறார்களோ அது பற்றியும் மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றி கற்பிக்கப்பட்டிருந்தார்கள்.

**I அவர்கள் என்ன கேட்கிறார்கள் அல்லது எதைப் பார்க்கிறார்கள்?**

நாம் எப்படி சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும்? நம் குழந்தைகள் எப்படி சிறப்பாக கற்றுக்கொள்ள முடியும்?

**வாயின் வார்த்தைகளினால் :-** அன்றாடம், பெற்றோராகிய நாம், நம் பிள்ளைகளை வெற்றியுள்ள வாலிபர்களாக வளர்வதற்கு நம் வாயின் வார்த்தைகள் அவர்கள் கற்றுக்கொள்ளும்படியாக இருக்க வேண்டும்.

**வாழ்க்கையினால் :-** நாம் வார்த்தைகளை தொடர்ந்து பேசாமல் இப்பொதொன்றும் பிறதொன்றுமாக பேசுகிறோம். தானாகவே, நம் பிள்ளைகள் நம்மிடமிருந்து எதைப் பார்க்கிறார்களோ அதையே பல மடங்கு அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக, இதுதான் உண்மையான மனோநிலை. ஒரு பெண் ஓயாமல் தன் கணவனுடன் வாக்குவாதம் செய்து கொண்டு, அவனுடைய தலைமைத்துவத்தை சவால் விட்டுக் கொண்டு இருக்கும் போது, தன்னுடைய பெண்பிள்ளைகள் அவர்கள் கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களை மதிக்கச் சொல்லி கற்றுக்கொடுக்கும்போது அவள் முழு வெற்றியையாம் அடைந்துவிட முடியாது.

## II அதிகாரம் உண்மையாகவே யாரிடத்திலிருந்து வருகிறது?

ஆண், பெண், பெற்றோர் என்ற நம்முடைய பின்னிப்பிணைந்த இந்த உறவில், அதிகாரங்களை நாம் யாரிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம்? தலைமையேற்று நடத்துவது, கீழ்ப்படிந்துபோவது என்பதெல்லாம் சாதாரணமாக வழக்கத்தில் உள்ள ஒன்று. மற்றபடி இதில் ஏதும் சிறப்பு இல்லையென்று மக்கள் அநேக சமயங்களில் நினைத்து விடுகிறார்கள். ஆண்கள் தங்களுக்கேயுள்ள பலத்தால் பெண்களை ஆளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பொதுவாக நிலவி வருகிறது. பெண்களும் தங்கள் கணவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, மிகவும் அற்பமாயும் சுய நலமாயும் ஆண்களால் நடத்தபடுகிறார்கள் என்ற எண்ணம் இருந்து வந்தது.

அதிகாரங்கள் தேவனிடத்திலிருந்து வருகிறது. அவர்தான் எல்லா மனித இனத்திற்கும், மனித இனம் சம்பந்தப் பட்டவைகளுக்கும் சர்வ அதிகாரி. ஆண் குடும்பத்திற்கு தலையானவன் என்று அவர் சொல்லும் போது அந்தத் தகுதியான வேலைக்கு அவனை நியமித்தார் என்பதை சிருஷ்டிகர் என்ற அதிகாரத்தால் அவர் அவ்வாறு கூறுகிறார். ஆணுக்கு துணையாகப் பெண்ணை உருவாக்கி, வாழ்க்கையில் அவளுடைய பங்குகளை நியமிக்கும்போது மீண்டும் சிருஷ்டிகர் என்ற அதே அதிகாரத்தில் தான் அவ்வாறு செய்கிறார். எந்த ஒரு மனிதனும் தேவனுடைய அதிகாரம், அவருடைய கட்டளை, அவருடைய ஒழுங்கு முறை மீது சவால்விட்டு வெற்றி பெற்று விட முடியாது.

இந்தப் பொறுப்பை ஒரு மனிதன் ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது, குற்றம் சாட்டுகின்ற மகிழ்ச்சியில்லாத மனைவியோடு வேண்டாவெறுப்பாக வாழ வேண்டிவரும். தேவன் தம்முடைய அதிகாரத்தால் சொன்ன கட்டளைக்கு இவன் கீழ்ப்படியாததுதான் இந்த எதிர்ப்புக்குக் காரணம். தங்கள் கணவன் மார்களின் தலைமைத்துவத்தை ஏற்காத பெண்களுக்கும் இதே நிலைதான். தேவனோடு அவள் போர் செய்கிறவளாக காணப்படுவாள்.

இந்த உண்மையை ஆண்களும், பெண்களும் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது அவசியம்! நான் உனக்கு சொல்கிறேன் நீ இதை செய் என்று பெற்றோர் பிள்ளைகளிடத்தில் சொல்லக்கூடாது. அதே நேரத்தில், தாங்கள் பெற்றோராய்

இருப்பதால், நாங்கள் அப்படி செய்கிறோம் என்பதை வலியுறுத்த வேண்டும். அப்படிச் செய்வது அவர்களிடையேயுள்ள பெற்றோருக்கு விரோதமாக எழும்பும் ஆத்திர குணம், உதாசினப்படுத்துதல் ஆகிய தன்மைகளை களைந்தெறியச் செய்ய உதவும். அத்தோடு கூட தேவனுடைய அதிகாரத்திற்கு அவர்கள் தங்களை தகுதிப்படுத்த அது பிரயோஜனமாயிருக்கும்.

**பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்** இது நியாயம். உனக்கு நன்மை உண்டா யிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடிப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக் குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங் களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக் கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக [எபே. 6 : 1 – 4]. **பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்கு பிரியமானது** [கொலோ. 3:20].

பிள்ளையானவன் தங்கள் பெற்றோர் தேவனுடைய அதிகாரத்தின் கீழே கொடுக்கப்பட்டவர்கள் என்பதை கட்டாயம் உணர வேண்டும். தேவனிடத்தில் அன்பு கூருதல், பெற்றோருக்கு கீழ்ப்படிதல், சட்டங்களுக்கு கீழ்ப்படிதல், இப்படியே ஆயிரக்கணக்கான ஒவ்வொரு காரியங்களுக்கும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் தங்கள் சொந்த இஷ்டப்படி அதிகாரம் செலுத்தவே கூடாது. பெற்றோர்கள் பிள்ளை வளர்ப்பு சம்பந்தமாக எப்படி தேவ சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமோ அதே போல் பிள்ளைகளும் பெற்றோருக்காக அல்லாமல் தேவனுக்காக அப்படிச் செய்ய வேண்டும்.

மனித உறவு என்னும் சொத்தை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அனுப்புவதென்பது பயத்துடனும், பொறுப்புடனும் செய்யப்படக்கூடிய வேலையாகும். குடும்பத் தலைவனாய் இருப்பதால் ஒரு கணவனுக்கு இதில் முக்கியப் பங்குண்டு. ஆனால், மனைவியானவள் வீட்டிலிருந்து கொண்டு தன் பிள்ளைகளை ஊட்டி வளர்க்கும் தனி சிலாக்கியம் பெற்றி ருப்பதால், அவள் கணவனைக்காட்டிலும் பிள்ளைகளுக்கு அதிகம் கற்றுத்தர முடியும். இவைகளை நாம் பிடித்துக் கொள்வது தேவ சித்தமாகும். இவைகளின்படி செய்கிற குடும்பங்கள் பாக்கியமுள்ளவைகள்.

வாலிபர் பகுதி

# செவிச் செல்வம்

Dr. **ஏபில் நாயகம்**

**வா**லிபர்களே! கிறிஸ்தவ ஓட்டத்தில் நமக்குத் தேவையான விசுவாசத்தையும், தைரியத்தையும், சகிப்புத் தன்மையையும் நாம் பல வழிகளில் பெற்றுக்கொள்கிறோம். தினந்தோறும் வேதாகமத்தை வாசிப்பதன் மூலமும், தியானிப்பதின் மூலமும், பாடல்கள் மூலமாகவும் கூட நாம் மேற்சொன்ன காரியங்களை பெற்றுக் கொள்கிறோம். அந்த வகையிலே நாம் கேட்கிற வேத ஆராய்ச்சி பாடங்களும், ஞாயிற்றுக்கிழமைகளில் நாம் கேட்கும் வேத அறிவுரைகளும் நமக்கு பிரயோஜனமாகவே இருக்கின்றன. காதுகளின் வழியாக நமக்கு கிடைக்கப் பெறும் அறிவுரைகள் நமக்கு மிகவும் பிரயோஜனமானவையாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூட பல நேரங்களில் கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று சொல்லுகிறதை கவனிக்க முடியும். [மத் 13: 9; மத் 13:43]. எனவே, தேவனுடைய காரியங்கள் சொல்லப்படும் போது, அதை கேட்க வேண்டும். நன்றாய் கேட்க வேண்டும். பிரயோஜனம் உண்டாகும்படி கேட்க வேண்டும் அப்படி நாம் செய்கிறோமா? நாம் எப்படிப்பட்ட காதுடையவர்களாக இருக்கிறோம்?

எபிரெயர் 5:11- ல் ஒரு வகையான செவியுடையவர்களைப் பற்றி நாம் வாசிக்க முடியும். மந்தமான செவியை உடையவர்கள், இப்படிப்பட்ட காதுகளை உடையவர்களுக்கு ஒரு காரியத்தைப் புரியும்படி விளக்குவது கடினமான ஒரு காரியம். ஏனென்றால் பிரச்சனை, சொல்லுபவரிடமோ அல்லது சொல்லப்படும் காரியத்திலோ இல்லை. மாறாக, கேட்பவரின் காதுகளில் தான் அந்த பிரச்சனை இருக்கிறது. இப்படிப்பட்ட காதுகள் நமக்கு உண்டானால், நாம் கேட்கும், கேட்கிற காரியத்தின் மூலம் நமக்கு எந்த பிரயோஜனமும் இருக்காது. இதைக்குறித்து மத் 13;13-15 ல் நாம் வாசிக்க முடியும். ...கேட்டும் கேளாதவர்களாயும், உணராதவர்களாயும்... 15 -ம் வசனத்தில் தேவன் நம்மை ஆரோக்கியமாக்கவிடாமல் நம்முடைய மந்தமான செவிகள் தேவனை நம்மிடமிருந்து தடுக்கிறது என்று வாசிக்க முடியும். நமக்கு சொல்லப்படும் காரியங்களை நாம் கேட்க வேண்டும்.

கேட்பதின் மூலம் நம் இருதயம் உணர்வடைய வேண்டும். அதன் மூலம் நம்மிடத்தில் மனமாற்றம் ஏற்படவேண்டும். அப்படியில்லாமல் கேட்க வேண்டுமே என்பதற்காக மட்டும் கேட்டால், நம் நிலையில் எந்த மாற்றமும் வரப்போவதில்லை. அப்படிப்பட்ட மந்தமான காதுகளை தேவன் விரும்புவதுமில்லை.

II தீமோ 4:3–4 ல், இன்னொரு வகையான செவியை உடையவர்களைப் நாம் கவனிக்க முடியும். அவர்கள் செவித்தினவுள்ளவர்கள் செவித்தினவு என்றால் பிரியமுண்டாகும் காரியங்களை மட்டும் கேட்பது என்று அர்த்தம். அதாவது, உண்மை எது, பொய் எது என்பதையும், சத்தியம் எது என்பதையும், விட்டு விட்டு நான் கேட்பதற்கு எது பிரியமாயிருக்கிறது என்று மட்டும் பார்த்து, அதை மட்டும் கேட்பது. இன்று பலர் அப்படித்தானே இருக்கிறார்கள். சத்தியம் சொல்லப்படும் போது அதை கவனிக்க மனதில்லை. ஒருவர் செய்யும் தவறை வேதாகமத்தின் அடிப்படையில் தவறு என்று சுட்டிக் காட்டப்படும் பொழுது அதை ஏற்க வெறுக்கிறார்கள். மாறாக, ஆசீர்வாதமான காதுகளுக்கு இனிமையான வார்த்தைகளையும், அப்படிப் பேசுபவர்களையும் விரும்புகிறார்கள்.

வசனம் – 3 ல் – அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை விரும்புவதில்லை என்று வாசிக்கிறோம். செவிக்கு இனிமையாய் தோன்றுகிற அனைத்துமே ஆரோக்கியமில்லாத உபதேசம் தான். ஆரோக்கியமில்லாத உபதேசத்தை கொடுக்கும் போதகர்களையே அப்படிப்பட்டவர்கள் தேடுகிறார்கள். அவர்கள் சத்தியத்தை விரும்பாமல் கட்டுக்கதைகளையே விரும்புகிறார்கள். பிரியமானவர்களே, நம்மில் அப்படிப்பட்ட செவிகளை உடையவர்கள் இருக்கிறோமா? மெய்யான சத்தியம் சொல்லப்படும் பொழுது அதை விரும்பாமல் நமக்கு பிரியமுண்டாகும் வார்த்தைகளை நாம் தேடுவோமாகில் நாமும் செவித்தினவுள்ளவர்கள்தான். இப்படிப்பட்ட செவிகளையும் தேவன் விரும்புவதில்லை.

தேவனுக்கு மகிமையான ஒரு வாழ்வை நாம் வாழ முற்படும் பொழுது, நம் செவிகள் சத்தியத்தை விரும்பும் செவிகளாக, அதே நேரத்தில் கடினமான உபதேசத்தை வெறுக்காத செவிகளாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் கேட்பதோடு மட்டும் நம் வேலை முடிந்து போக கூடாது. மத். 10:15 ல் இயேசு

கிறிஸ்து இப்படியாகச் சொல்லுகிறார். நீங்கள் கேட்டு உணருங்கள். நாம் கேட்கும் வசனங்களும், போதகங்களும் நம்மை உணர்வடையச் செய்ய வேண்டும். கேட்டும் உணராமல் இருந்தால், கேட்டது பிரயோஜனமாகாது

லூக்கா 8:55 ல் **நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள், வசனத்தை கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள் என்று இயேசு உவமையாக சொல்வதை கவனியுங்கள். நாம் கனி கொடுக்க கேட்பது மட்டும் போதாது. கேட்கும் வார்த்தைகளை இதயத்திற்குள் எடுத்துச் செல்ல வேண்டும். அப்பொழுது தான் இருதயம் உணர்வடையும். உணர்வடையும் இருதயம் கனி கொடுக்கும்.**

வாலிபர்களே, **தேவனுடைய வசனங்களை கேட்பதில் மந்தமில்லாமல்**, செவித்தினவு உள்ளவர்களாக இல்லாமல், சத்தியத்தை சத்தியமாக ஏற்றுக் கொள்ளும் செவிகளை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட செவி மூலம் கேட்கும் வசனங்களையும், அறிவுரைகளையும் இருதயத்திற்கு எடுத்துச் செல்வோம். அதன் மூலம் உணர்வடைவோம். உணர்வடைந்து தேவனுக்கேற்ற கனிகளை கொடுப்போம். ஆமென்!

---

## யாரை, எப்படி சீர்பொருந்தப்பண்ண வேண்டும்?

**குற்றத்தில் அகப்படுகிறவர்களைச் சீர்பொருந்தப்பண்ண வேண்டும்**

**(கலாத்தியர் 6:1, மத்தேயு 18:15–17)**

**இதன் மூலம் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்ற முடியும்**

**(கலாத்தியர் 6:2)**

**சாந்தமுள்ள ஆவியோடு சீர்பொருந்தப்பண்ண வேண்டும்**

**(கலாத்தியர் 6:1)**

சிறுவர் பகுதி

# ஒரு புதிய மாற்றம்

Dr. பிரெய்ஸி

**ஹ**லோ குட்டீஸ், எப்படி இருக்கீங்க?

எல்லாரும் முந்தின கட்டுரையைப் படித்து அதன்படி நடப்பீர்களென நம்புகிறேன். இந்த மாதம் நான் உங்களுக்கு விசுவாசத்தைக் குறித்து சொல்லப்போகிறேன். நம் ஒவ்வொரு வரிடத்திலும் விசுவாசம் இருதயத்தில் நிரம்பி வழிய வேண்டுமென தேவன் பிரியப்படுகிறார்.

மத்தேயு 17:20 –ல் கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம் என்று இயேசு சொல்லுகிறார்.

லூக்கா 8– ம் அதிகாரம் 43 – வசனம் முதல் 48–ம் வசனம் வரை படிக்கும் போது நாம், 12 வருடம் பெரும்பாடுள்ள ஸ்தீரியை பார்க்கிறோம். அவள் இயேசுவுக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள். குணமடை வேன் என்று விசுவாசித்து வஸ்திரத்தை தொட்டு குண மடைந்ததை இயேசு அறிந்து அவளை நோக்கி மகளே என்றழைத்து உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது நீ சமாதானத்தோடே போ என்றார்.

என் அருமை பிள்ளைகளே, நீங்கள் உங்கள் சுயபுத்தியில் சாயாமல் தேவன் மேல் விசுவாசத்துடன் இருந்தால் அவர் உங்கள் வாழ்வில் நீங்கள் உயர்ந்த நிலையை அடைய உதவி செய்வார்.

நீங்கள் ஜெபிக்கும் போது, நீங்கள் வேண்டிக் கொள்வது நிச்சயம் கிடைக்கும் என்ற விசுவாசத்துடன் தேவனை நோக்கி ஜெபித்தால் நிச்சயம் பெற்றுக் கொள்வீர்கள் பிள்ளைகளே...

எனவே, நீங்கள் ஜெபிக்கும் போது முழு விசுவாசத்துடன் **முழுங்காற்படியிட்டு** கண்களை மூடி தேவனிடம் பெற்று கொண்ட நன்மைகளுக்கு நன்றி செலுத்தினால் கர்த்தர் உங்களுக்கு வேண்டிய எல்லா ஆசீர்வாதங்களையும் தருவார் என்பது நிச்சயம்.

அன்புடன்
ப்ரெய்ஸி அக்கா!

## சிறுவர்களுக்கான வேத வினா

1. கடுகு விதையளவு விசுவாசமிருந்தால் எதை அசைக்கலாம்?

2. பெரும்பாடுள்ள ஸ்திரீ எத்தனை வருடங்கள் உபத்திவப் பட்டாள்?

3. வஸ்திரத்தைத் தொட்டதும் நடந்தது என்ன?

4. நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?

5. சுயபுத்தியில் சாயாமல் யார் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும்?

6. பெரும்பாடுள்ள ஸ்திரீயாருக்கு பின்னாக நின்றிருந்தாள்?

### சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | |
|---|---|
| B. பெனிட்டா டென்னி சாரோன் | - காங்கயம் |
| K.J. கிங்ஸ் லி ரூபஸ் | - காங்கயம் |
| J. சகாய புஷ்பராஜ் | - மணப்பாறை |
| சாமுவேல் .K. | - சிவன்மலை |
| R. எக்லிசியா | - காரைக்கால் |

# முழுக்கு ஞானஸ்நானம்

பாவ மன்னிப்புக்காக முழுக்கு ஞானஸ்நானம்

பெறுவது ஒரு எளிமையான செயலாயிருந்தாலும்

கூட பெரும்பாலான மதப் போதகர்களால்

ஏன் அது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது,

குழப்பப்படுகிறது, மறுக்கப்படுகிறது?

குழப்பத்தால் மறுபிறப்பை தடுக்க முடியும்

என்பதை சாத்தான் அறிந்திருப்பதால் அப்படியிருக்குமோ?

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன், அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை மார்ச் மாத இதழில்)**

## I நாளாகமம் புத்தகத்தில் தேடிக்கண்டுபிடியுங்கள்

### (1-10 அதிகாரங்கள்)

1. யூதாவின் குமாரர் பெயர்களை எழுதுக?
2. கேசூரின் ராஜாவின் பெயர் என்ன?
3. இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன் யார்?
4. கர்த்தரின் புத்திரர் எங்கே வாசம் பண்ணினார்கள்?
5. சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை எங்கே கட்டினான்?
6. யோசுவாவின் தகப்பன் பெயர் என்ன?
7. எத்தனைபேர் தேவாலயத்துக்கடுத்த பணிவிடைக்குத் திறமையுள்ளவர்களாயிருந்தார்கள்?
8. வாசல்களைக் காக்கிறவர்கள் எங்கெல்லாம் இருந்தார்கள்?
9. பெலிஸ்தர் யாரோடு யுத்தம் பண்ணினார்கள்?
10. சவுல் ராஜா எப்படி இறந்தார்?

## ஜனவரி மாத வினாக்களுக்கான விடைகள்

1. மனாசே *(21:3)*
2. நியாயப் பிரமாண புஸ்தகம் *(22:8)*
3. தோப்பு விக்கிரகம் *(23:6)*
4. பலி பீடங்கள் *(23:12)*
5. குதிரைகள் *(23:11)*
6. பலிபீடங்களின் மேல் *(23:20)*
7. பார்வோன் நேகோ *(23:29)*
8. மத்தனியா *(24:17)*
9. நெபுசராதான் *(25:8)*
10. பதினெட்டு முழம் *(25:17).*

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| ரெஜினா | - | அரக்கோணம் |
| T. கலையரசன் மோகன்தாஸ் | - | தோளூர்பட்டி, திருச்சி |
| M. செல்வம் | - | வடவள்ளி |
| K.S. மாணிக்கவாசகம் | - | திருச்சி |
| சேகர் | - | நாகர்கோவில் |
| டெய்ஸி | - | வள்ளியூர் |
| தே. தனம் பேன்ஸி | - | கள்ளக்குறிச்சி |
| J. ஜான்சி | - | ஆனைமலை |
| M.K. இம்மானுவேல் ராஜா | - | சென்னை |
| V.S.S. பால்ராஜ் | - | மதுரை |
| G. பாக்ய சம்பூரணம் | - | ஈரோடு |
| G.R. ஹேமாவதி | - | பவானி |
| R. ரோசினி | - | பவானி |
| இயேசுதாஸ் | - | திண்டுக்கல் |
| C. அருள்ராஜ் | - | சென்னை |
| P. ஜெயக்குமார் மாலதி | - | மூலனூர் |
| ஜெயசுந்தரி | - | சென்னிமலை |
| சின்னத்தாய் | - | சென்னை |
| செல்வமணி குணசேகரன் | - | சென்னை |

# சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது

Bro. பென்னி மார்டீன்

பிரியமான திருமறை ஆசான் வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைப்பில் காணப்படும் வாசகத்தைப் பார்த்து நாம் மலைத்துப் போகிறோம், காரணம் பரபரப்பான இவ்வுலகில் இது காணக்கிடைக்காத வார்த்தைகளாக மாறிவிட்டபடியால் எப்போதுமே இது பரவசத்தை ஏற்ப்படுத்துகிறது. இப்பாழாய்போன உலகில் காலையில் கண்விழித்ததிலிருந்து இரவில் விண்மீன்களை காணும் வரை எங்கும் தங்கு தடையின்றி அநியாயம் அரங்கேறி வருகிறதையும், தீமை தீப்போல் பரவிவருகிறதையும் பார்த்து பதறுகிறோம்ஷி கதறுகிறோம். சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். எனனும் வேத வாக்கியம் ரோமர் 8:28 ல் இடம் பெற்றிருக்கிறது. இவ்வசனம் வாழ்வின் தாழ்வான நேரங்களில் உலகப்பிரச்சனைளில் நாம் உழன்று கொண்டிருக்கும் போது நம்மை உற்சாகப்படுத்தி உவகையின் உச்சத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இவ்வசனத்தில் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய அரவணைப்பையும்; பராமரிப்பையும் உணர முடியும். தேவனுடைய பராமரிப்பு அருமையானது அலாதியானது அதை நம் அன்றாட வாழ்வில் அனுபவித்து வருகிறோம். தேவனுடைய பராமரிப்பு இரண்டு வகைப்படும். 1. பொதுவான பராமரிப்பு இது தேவன் தாம் உண்டாக்கின மனித இனத்தின் மீது அவர் கொண்டிருக்கும் அளவற்ற அன்பின் காரணமாக வானத்திலிருந்து செழிப்புள்ள காலங்களையும் நமக்கு தந்து ஆகாரத்தனாலும் சந்தோஷத்தினாலும் நம் இருதயங்களை நிரப்பி இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்து சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை (அப்போஸ்தலர் 14:17). 2. விசேஷித்த பராமரிப்பு. இந்த பராமரிப்புக்கு பங்காளிகள் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தான். இது நம்முடைய ஒட்டுமொத்த அறிவையும் ஒருமுகப்படுத்தி ஆராய்ந்து பார்த்தாலும் நம்முடைய புருவங்களை விரியச் செய்கிறது. நிச்சயமாகவே தேவனுடைய இந்த அன்பும் அரவணைப்பும் பராமரிப்பும் நம் அன்றாட வாழ்வில் நாட்களை நகர்த்தப்போதுமானது.

**1. பாடுகள் பற்றி நம்முடைய பார்வை**

பாடுகள் என்பது இப்பூமிக்குரிய வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது, அதைத் தவிர்க்கவோ அல்லது தடுக்கவோ மனிதனால் முடியாது. பக்தனாகிய யோபு **ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாய் இருக்கிறான்** என்று சொல்கிறார் (யோபு 14:1). கிறிஸ்தவ வாழ்க்கையிலும் கூட பாடுகள் என்பது அழையா விருந்தாளியாக வந்து நம்மை சிரமத்தின் சிகரத்திற்கே அழைத்துச் சென்று விடுகின்றன. ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் பாடுகள் வரவில்லையென்று சொன்னால் அவர் சரியான கிறிஸ்தவ வாழ்க்கை வாழவில்லை என்றுதான் அர்த்தம். அது மட்டுமல்லாமல் பாடுகள்தான் பல கிறிஸ்தவர்களின் பாதையை மாற்றுகிறதாக இருக்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலர் வசனத்தை ஆரம்பத்தில் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள். பிற்பாடு வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டாகும்போது இடறலடைவார்கள் என்று சொன்னார். பலர் கிறிஸ்தவ மார்க்கத்தைத் தழுவினால் ஆனந்தமும் ஆசீர்வாதமும் அளவில்லாமல் கிடைக்குமென்று எண்ணி அவைகள் நிரந்தரமில்லை என்று அறிந்த உடனே நிராசையுடன் கடந்து சென்று விடுகிறார்கள். எனவே, கிறிஸ்தவ வாழ்க்கையில் பாடுகளை எப்படி கையாள்வது? என்பதை அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

இந்த ரோமர் எட்டாம் அதிகாரம் பாடுகளைப் பற்றி நமக்கு எப்படிப்பட்ட பார்வை இருக்க வேண்டுமென்று கற்றுத்தருகிறது. அதிலும் குறிப்பாக 18 ஆம் வசனத்தில் ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல, என்று நாம் பார்க்கிறோம். இவ்வசனத்தைப் புரிந்து கொள்ள பெரிய விண்வெளி விஞ்ஞானம் ஒன்றும் அவசியமில்லை. இவ்வுலகில் ஒருவர் ஒரு பெரிய சாதனையை நிகழ்த்த வேண்டுமென்றால் அதற்கான முறையில், அதற்கான துறையில் பாடுபடுவது அவசியமானது என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். சோதனையும் வேதனையும் நிறைந்த உலகில் சாதனைப் புரிவதற்கு பாடுபடுவது அவசியம் என்றால் கண்ணீரும் கவலையும் இல்லாத பரலோகில் பிரவேசிப்பதற்கு எத்தனைப் பாடுபட்டாலும் அத்தனையும் தகும்.

## 11 தேவனுடைய தீர்மானம்

தேவன் ஒன்றை தீர்மானித்து விட்டால் அது தீர்க்கமாய் நடந்தே தீரும். மனிதன் பல தீர்மானங்களை தன் வாழ்வில் எடுக்கிறான் ஆனால் பல்வேறுபட்ட காரணங்களால் அவைகளை நிறைவேற்ற முடியாமல் போய்விடுகிறது. இது தேவனுக்குப் பொருந்தாது ஏனென்றால், அண்டசராசரங்களை உண்டாக்கின தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தேவனுடைய தீர்மானத்தை இவ்வுலகிலுள்ள சக்திவாய்ந்த எந்த மனிதனாலும் தடுக்க முடியாது. பழம்பெரும் பக்தனாகிய யோபு தேவன் செய்ய நினைத்தது தடைபடாது என்று சொல்கிறார் (யோபு42:2). ஏசாயா 42:2). ஏசாயா 14:24 ல் இஸ்ரவேலின் சத்துருவாகிய அசீரியாவின் வீழ்ச்சியைப் பற்றி சேனைகளின் கர்த்தர் சொல்லும்போது ‘‘நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும்’’ என்று சொன்னார்.

அதே போல், இஸ்ரவேலை சிறைவாசத்திலிருந்து மீட்க கோரேசை எழுப்ப தேவன் தீர்மானித்தபோது அதை யாரும் தடுக்க முடியவில்லை. இப்படி வேதாகமத்தின் பல சம்பவங்களை நாம் எடுத்து அடுக்கிக் கொண்டே போனாலும் தேவனுடைய தீர்மானங்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாய் ஆதியாகமம் 37-50 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நெஞ்சை நெகிழ வைக்கும் சம்பவம் நிமிர்ந்து நிற்கிறது. யாக்கோபு தன்னுடைய எல்லா குமாரரைக் காட்டிலும் யோசேப்பை அதிகமாக நேசித்து யோசேப்புக்கு பலவண்ண வஸ்திரங்களை உடுத்தி அழகு பார்த்தான். இதன் காரணமாக யோசேப்பின் சகோதரர்கள் அவன் மேல் பொறாமைக் கொண்டு அவனை இஸ்மவேலரிடத்தில் விற்றுப்போட்டு கொடிய விலங்கு அவனை கொன்று விட்டதாக தங்கள் தகப்பனாகிய யாக்கோபினிடத்தில் பொய்ச் சொன்னார்கள். எகிப்தில் அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு தன் சகோதரர்களுக்கு ஆதரவாயிருந்து அவர்களுக்கு ஆகாரங்கொடுத்தான். ஆரம்பத்தில் யோசேப்பு தேவனுடைய பராமரிப்பை அறியவில்லை ஆனால் தன் வாழ்க்கையில் சகலமும் நன்மைக் கேதுவாக நடந்தேறியபின் அவன் சகோதரர்களைப் பார்த்து ‘‘நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனே, இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும் படிக்கு அதை நன்மையாக முடியப் பண்ணினார்’’ (ஆதியாகமம் 50:20) என்று சொன்னார். இதுதான் தேவனுடைய பராமரிப்பு எனப்படுகிறது.

பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலும் பல காரியங்கள் நமக்கு எதிராக நடக்கும்போது, பல காரியங்கள் புதிராகத் தோன்றும்போது எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? தேவன் என்னை கைவிட்டு விட்டார் என்று அவசரப்பட்டு முடிவெடுத்து விடுகிறோம். நாம் யோசேப்பின் வாழ்க்கையில் பார்த்ததுபோல் ஆரம்பத்தில் சகலமும் தீமைக்கு ஏதுவாக நடப்பதுபோல் தோன்றலாம் ஆனால் இறுதியில் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்று உறுதியாக சொல்லமுடியும். விண்ணில் வாசம் செய்யும் தேவனுடைய செயல்பாடுகளை மண்ணில் வாழும் மனிதனால் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது. நம்முடைய கண்களால் காணமுடியாத தேவனுடைய கிரியைகளை நம் விசுவாசக் கண்களால் காண பிரயாசப்பட வேண்டும். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✝

---

## ஏன் தாமதிக்கிறார்கள்?

- **சத்தியத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததால்**
  **(அப்போஸ்தலர் 17:32)**
- **சத்தியத்திற்கு கீழ்படியத் தேவையில்லை என்று நினைப்பதால்**
  **(அப்போஸ்தலர் 24:25)**
- **உலகத்தை அதிகம் சிநேகிப்பதால்**
  **(யோவான் 12:42)**
- **சத்தியத்தில் நிலைத்திருக்க முடியாதென்று நினைப்பதால்**
  **(மத்தேயு 10:22)**
- **கொடுக்க வேண்டிய விலை அதிகமென்று எண்ணுவதால்**
  **(மாற்கு 8:34)**

**ஆயினும், சத்தியத்திற்குக் கீழ்ப்படிய பவுல் தாமதிக்கவில்லை.**

**நீங்கள் எப்படி?**

# யூதாஸ்

Bro. K. M. பிலிப் -பவானி

**அ**ன்பான வாசகர்களுக்கு உயிர்த்தெழுந்த நல்மீட்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்ததின் நோக்கமே, ''இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே'' என்பதே மிகச் சிறப்பாகும் [லூக்கா. 19:10]. அவர் வந்தது மட்டுமல்ல, ''வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'', என்று அழைப்பும் கொடுத்திருக்கிறார் [மத் 11:28]. அன்பானவர்களே! உலகில் வாழும் மக்களில் சிலர் கிடைத்த வாய்ப்புகளை சரியாய்ப் பயன்படுத்தி வாழ்க்கைத் தரத்தைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள். சிலர் வாய்ப்புகள் தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தோடு, ''வெந்ததை தின்போம், விதி வந்தால் சாவோம்'' என்று விரக்தியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லையே! என்று சோம்பலுக்கு இடம் கொடுத்து ஏமாற்றத்தோடு புலம்பியே வாழ்வில் புரண்டு போய் கிடக்கிறார்கள். ஆனால், சிலருக்கோ வாய்ப்புகள் வீடு தேடி வந்து, கதவைத்தட்டி திறந்து, கையிலே கொடுத்தாலும், அதன் உண்மையை உணராமல் ஞானமற்றவர்களாய், அசட்டையாய், அஜாக்கிரதையாயிருந்து, அரிய வாய்ப்பை இழந்து, கொடிய முடிவைத் தேடிக் கொள்கிறார்கள்.

இந்த வரிசையில் முதலாவது நிற்பவர்கள் ஆதாமும், ஏவாளுமே. அவர்கள் ஒருபோதும் கிடைக்காத, பொய்யான வாய்ப்புக்குத் தங்கள் வாயைத் திறந்ததால் தேவனோடு வாழும் இன்பமான வாழ்வாங்கு வாழ்க்கையை இழந்து வெட்கத்தோடு, துக்கத்தோடு நின்றார்கள்[ஆதி.3]. ''நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ?'' என்று தேவன் மேன்மையான வாழ்க்கைக்கு வழிகாட்டியபோதும், ஆதாமின் மகன் காயீனின் காய்மகுணத்தால் இனிப்பான வாழ்வை இழந்து கசப்பான வாழ்வின் சாபத்தைப் பெற்றான் [ஆதி.4:2,12]. தேவன் சோதோம், கொமாரா பட்டணங்களை அழிக்குமுன், நீதிமான் – லோத்துவின் குடும்பம் முழுவதையும் காப்பாற்ற தேவதூதர்களை அனுப்பி வலுக்கட்டாயமாக அவர்களை பட்டணத்தை விட்டு வெளியேற்றினார். இப்படி லோத்தின் மனைவிக்கு குடும்பமாய் வாழும் வாய்ப்பு கிடைத்தும், உலகப் பொருளின் மீது இச்சை கொண்டு, தேவ கட்டளையை அலட்சியம் செய்து திரும்பிப்

பார்த்து உப்புத்தூண் ஆனாள் (ஆதி 19:1-26). புதிய ஏற்பாட்டில் ஒரு வாலிப ஐசுவரியவான் நித்திய ஜீவனைப் பெற்றே தீர வேண்டும் என்று தீவிரமாய் இயேசுவினிடத்தில் வந்த அவனுக்கு, அதைப்பெற்றுக் கொள்ளும் அருமையான வாய்ப்பை இயேசு ஆலோசனையாய்க் கொடுத்தும், தன் பாரம்பரிய பணக்கார கௌரவத்தை விட்டுக் கொடுக்க மனதில்லாததால் நித்தியத்தை இழந்து போனான் (மாற் 10:17-22). சிலுவையில் அறையப்பட்ட இருவரில் ஒருவனுக்கு தன் வாழ்வின் கடைசி நேரத்தில் கிடைத்த, 'இயேசுவோடு பரதீசில்' வாழும் வாய்ப்பைத் தன் மதியீனத்தால் இழந்து போனான். இன்றும் இழந்து போனதைத் தேட வந்த இயேசுவின் மாறாத கற்பனைகளுக்குக் கீழ்படிய மனதில்லாததால், அறியாமையால், பாரம்பரிய பெருமையால், மதியீனத்தால், அசட்டையால் நல்ல வாய்ப்புகளை இழந்து கொண்டிருக்கும் அன்பானவர்களே! தேவன் சபை மூலமும், வேதத்தின் மூலமும் கொடுக்கும் ஒவ்வொரு அரிய வாய்ப்பையும் பயன்படுத்தி பரலோக வாழ்வைப் பெற்றுக் கொள்வோம்.

பிரியமானவர்களே! இப்படி கையில் கிடைத்த அனைத்து வாய்ப்புகளையும் இழந்தவர்களின் வரிசையில் முதல்தரமானவன் தான் யூதாஸ்காரியோத்து. யூதாஸ் என்ற பெயருக்குள் அநேக பெருமைகள் உண்டு. யூதா என்றால் தேவனை புகழும் **துதி** என்ற சொல்லுக்கு உரியது. இஸ்ரவேலின்12 கோத்திரங்களில் யூதவம்சம் 4வது இடமாயிருந்தாலும், யுத்தத்திற்கு புறப்படும் நிலையில் முதலில் செல்லும்படியாக, ''பாலசிங்கமாகிய'' (ஆதி.49:9) யூதாவையே தேவன் தெரிந்து கொண்டார் (நியா 1:2), தாவீதும், இயேசுவும் இவ்வுலகில் பிறந்தது இந்த யூதவம்சத்தில் தான். இத்தகு பெருமை மிக்க பெயரைத் தரித்துக் கொண்ட யூதாசின் வாழ்க்கையும் எவ்வளவு மேன்மை உள்ளதாயிருந் திருக்க வேண்டும்? இவனுடைய தகப்பன் சீமோன் இவனுக்கு யூதாஸ் என்று ஆசையாய் பெயர் சூட்டியதும் இதற்காகத்தானோ?

உண்மையில் பெயர் மட்டுமல்ல, இவனது வாழக்கையும் பெருமைக்குரியதாய், பெயருக்கேற்றபடி வாழ 100% வாய்ப்பையும் பெற்றவன் தான் இந்த யூதாஸ். இவனுக்கு இயேசு கொடுத்த மகத்தான வாய்ப்பை குறித்து பரிசுத்த ஆவியானவர் சொல்வதைக் கவனியுங்கள். யூதாஸ் அப்போஸ்த்தலர்களில் ஒருவன்; உலகத்தை இரட்சிப்புக்குள் கொண்டு வரும் ஊழியத்தில் பங்கு பெற்றவன் (அப் 1:7). 12 பேரில் பணம் கையாளும் பொறுப்பை இயேசுவால் பெற்றவன். வானமும், பூமியும் ஒழிந்து போனாலும், என்றுமே ஒழிந்து போகாத வேதத்தில் பேதுரு, யோவான்,

யாக்கோபு, பவுல் போன்ற பரிசுத்தவான்களின் வரிசையில் இடம் பெற வாய்ப்பைப் பெற்றவன். மற்ற சீஷர்களைப் போல் பரிசுத்த ஆவியின் வரத்தைப்பெற்று ஆத்தும அறுவடை செய்யும் ஞான வானாய்த் திகழ வேண்டியவன்; **அற்பனகாரியத்தின் மீது மனம் வைத்து, வாய்ப்புகளை எல்லாம் இழந்து அவலட்சணமான முடிவை சந்தித்தான்** என்பது நம் மனதைப் பதறச் செய்கிறது. பரி சுத்த ஆவியானவர் கூட மதியீனன் யூதாஸின் மீது தன் கோபத்தை வெளிப்படுத்துவதைக் கவனியுங்கள். ஆவியானவர் வேதத்தில் சிலரை அறிமுகப்படுத்தும்போது, **நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான்** [ஆதி 6:9] என்றும், **மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்** என்றும்[எபி 3:2], **தாவீதைத் தன் இருதயத்திற்கு ஏற்றவனாகத் தேவன் கண்டார்** என்னும் பெறுமையோடு கூறுகிறார். ஆனால், யூதாஸை அறிமுகப்படுத் தும் போதே, **அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்** என்றும் [மத்10:4], **துரோகியான யூதாஸ் காரியோத்** என்றும் [லூக்கா 6:16] வெகு காட்டமாக சாடுகிறதைக் காண்கிறோம். காரணம், எங் கோ திரிந்த யூதாஸை இயேசு அழைத்து, அப்போஸ்தலர்களுக் கான தகுதிப்படுத்தி, கனமான ஊழியப் பொறுப்பையும் கொடுத்து பிரகாசிப்பிக்கச் செய்த மகத்தான வாய்ப்பை உதாசினப்படுத்தி, கிறிஸ்துவுக்கே துரோகம் செய்த துரோகியானதால் கோபத்துக்காளானான். நமக்கும் கூட அவன்மேல் கோபமும், வெறுப்புமே ஏற்படுகிறது. **நானாக இருந்தால்.....** என்று கூட எண்ணத் தோன்றுகிறது, நல்லது. அதே சமயம் நமக்கும் கூட நம் பரமபிதா 'கிறிஸ்தவர்கள்' என்ற மிக மகிமையான பெயர் சூட்டியுள்ளார். பெயருக்கேற்ப வாழ, நம்மை சபையில் சேர்த்து, வேதத்தை கையில் கொடுத்து, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் உன்னதமான பொறுப்பான பணியையும் கொடுத்திருக்கிறார். இவைகளை நாம் நிறைவேற்ற நம்மோடு துணையாய்,''இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களோடு இருக்கிறேன்'' [மத். 28:20] ஜெயவீரர் கிறிஸ்து நமக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார். இத்தகைய அரிய வாய்ப்புகளைப் பயன் படுத்தி பரலோகில் நமக்குப் பொக்கிஷங்களை [ஆத்துமாக்கள்] சேர்த்து வைப்போம். நாம் ஒரு நோவாவா? மோசேயா? தாவீதா? அல்லது துரோகி யூதாஸா? சிந்திப்போம்! செயல்படுவோம்! ஈவாய் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் கவனமாய் பற்றிக்கொள் வோம். **கிறிஸ்தவர்** – என்ற பெயரில் தேவனைக் கனப்படுத்து வோம்...மீண்டும் யூதாஸை சந்திப்போம். ஆமென்!

**தொடரும்...**

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

J. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்

சென்ற மாதத் தொடர்ச்சி...

இன்னும் கொலோசெயர் 1:15-ல் ''அவர்... சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்'' என்பதை எடுத்து இயேசு கிறிஸ்துதான் எல்லா சிருஷ்டிப்பிற்கும் முதன்மையானவர், பிதா வாகிய தேவன் இயேசுவைதான் முதலாவது படைத்தார், பின்பு அவரைக் கொண்டும் அவருக்கென்றும் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்று போதிக்கிறார்கள். இந்த வசனம் மேற்சொன்ன விளக்கத்தோடு போதிக்கிறதா?

1. வேத வசனத்தை புரிந்து கொள்வதற்கு அதற்கு இணையான வசனத்தை தேடி வாசிக்க வேண்டும் என நாம் மேலே பார்த்தோம். அது போல வேதவசனத்தை புரிந்து கொள்வதற்கு இன்னொரு முறையும் உள்ளது. அதென்னவென்றால், நாம் எந்த வசனத்திற்கு அர்த்தம் அல்லது விளக்கம் தேடுகிறோமோ அந்த வசனப்பகுதிக்கு மேலே மற்றும் கீழே உள்ள வசனப் பகுதிகளையும் வாசித்து அந்த வசனப் பகுதிகள் எதைப் பற்றி பேசுகிறது அல்லது அந்த எழுத்தாளர் (பரிசுத்த ஆவியானவர்) எந்தக் கருத்தைச் சொல்லிக் கொண்டு வருகிறார் என்பதை ஆராய்ந்து பார்த்து விளக்கம் தெரிந்து கொள்ள வேண்டும்.

2. இந்த வகையில் கொலோசெயர் முதலாம் அதிகாரத்தை எடுத்துக் கொண்டால், அவர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்ட நாள் முதல் விசுவாசத்தினாலே தேவக் கிருபையை அறிந்து பரலோகத்தின் நம்பிக்கையும், தேவன் பேரில் அன்பும் கொண்டவர்களாக வாழ்கிறார்கள் என்று பவுல் கூறுவதுடன் அவர்களுக்காகவும் ஜெபிக்கிறார் கொலோ. 1:3-11.

3. அடுத்தது இருளின் அதிகாரத்திலிருந்து தேவன் அவர்களை தமது அன்பின் குமாரனுடைய (கிறிஸ்துவினுடைய) ராஜ்யத்தில் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு உட்படுத்தினார் என்றும் அந்த தகுதியை பெறும்படியான மீட்பு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே உண்டாயிருக்கிறது என்பதையும் தெளிவுப்படுத்துகிறார் (கொலோ.1:12-14).

4. தொடர்ந்து கொலோ.1:15–20 வரை வாசிக்கும்போது சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் பிதாவானவர் சிருஷ்டித்தார் என்றும் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யத்திற்கு அவரே ராஜா என்று விளக்கிய பிறகு அவர் (கிறிஸ்து) எந்த வகையில் முதல் நபராயிருக்கிறார் என்பதையும் விளக்குகிறார். அதென்னவென்றால், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தவர்களிலே (நித்தியமான மீண்டும் சாகாதபடி எழுந்தவர்களிலே) முதல் நபராயிருக்கிறார், (கொலோ. 1:17,18).

5. சங். 118:22; ஏசா. 28:16; மத். 21:42; மாற். 12:10,11; லூக்கா. 20:17,18; அப். 4:11; எபே. 2:20; I பேது. 2:6,7. இந்த வசனங்கள் இயேசு கிறிஸ்துவை மூலைக்கல்லாக கூறுகிறது. ஒரு கட்டடம் கட்டும்போது முதலில் வைக்கப்படுகிற கல்லே மூலைக்கல். இது உதாரணம், இதனுடைய மெய்யான அர்த்தம் என்னவென்றால்; கிறிஸ்துவானவர் அவருடைய ராஜ்யத்திலும் (எபேசி. 5:5), அவருடைய சபையிலும் அவரே முதல் குடிமகனாக முதல் அங்கத்தினராக இருக்கிறார் என்பது ஆகும்.

6. இப்படி அவருடைய சபையிலும் ராஜ்யத்திலும் முதல் நபராக இருக்கும்படி தேவன் திட்டமிட்டார். அப்படி அவர் முதல் நபராயிருக்கும்படி அவர் மரித்தோரிலிருந்து நித்தியமான (மீண்டும் சாகாதபடி) உயிர்த்தெழுதலை அடைய வேண்டியது அவசியமாயிருந்தது. ஆகவே, இயேசு கிறிஸ்துவானவர் நித்தியமான உயிர்த்தெழுதலை அடைந்தார் (ரோம. 6:9).

7. ஏனென்றால், அவருடைய ராஜ்யமும் சபையும் நித்தியமானதாய் (முடிவில்லாததாய்) இருக்கிறபடியால் அதன் முதல் நபரும் நித்தியமானவராக இருக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் அதில் சேரக்கூடிய நபர்கள் அனைவரையும் ஆவிக்குரிய மரணத்திலிருந்து விடுதலை செய்து, அவர் வரும்போது அனைவருக்கும் நித்தியமான உயிர்த்தெழுதலைத் தரும் நம்பிக்கையோடு இராஜ்யத்திலும் சபையிலும் உறுப்பினராக்க வேண்டியது அவசியமாயிற்று.

8. இதில் இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக அவருடைய அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி அவருக்குக் கீழ்படிகிறவர்களும் தேவனாலே சபையாக, இராஜ்யமாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், அப். 2:47; கொலோ. 1:13.

பிதாவாகிய தேவனோடு, தேவனாயிருந்த இன்றும் தேவனாயிருக்கிற இயேசு கிறிஸ்துவானவர், நம்மை பாவங்களிலிருந்து மீட்டு அவருடைய சபையாக, ராஜ்யமாக பரிசுத்தராக, நீதிமான்களாக, தேவனுடைய பிள்ளைகளாக நித்திய ஜீவனுக்கு பாத்திரர்களாக, இழந்து போன மகிமையைப் பெற்றவர்களாக வாழ அவர் (கிறிஸ்து) மனிதனாக வந்து, நமக்காக பாடுபட்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து இப்பொழுது சகல அதிகாரமும் பெற்றவராக பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து ஆளுகை செய்யக் கூடியவராயிருக்கிறார்!

கிறிஸ்துவின் இடத்தையும், அப்போஸ்தலர்களுடைய இடத்தையும் (அதிகாரத்தை) இன்றைக்கு சிலர் எடுத்துக் கொள்வது என்பது தேவனால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கது அல்ல.

இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திதப்படுத்துவாராக! என்கிற அப்போஸ்தலன் விருப்பத்தை நிறைவேற்றுவோம். தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தார்களையும் அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக! ஆமென்! ✝

## சபையில் நாம் ஏன் அங்கம் வகிக்க வேண்டும்?

**இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் அங்குள்ளனர் ( அப். 2:47 )**

**கர்த்தருக்குள் மரிக்கவும், ஆசீர்வதிக்கப்படவும் ( வெளி 14:13 )**

**சபைதான் தேவன் கொடுத்த ஒரே அமைப்பு ( மத். 16:18 )**

**ஏனெனில், கிறிஸ்து சபையை நேசித்தார் ( எபே. 5:25 )**

**இருளின் அதிகாரத்திலிருந்து விடுபட ( கொலோ. 1:13 )**

**தேவனை மகிமைப்படுத்த ( எபே. 3:21 )**

# அழியாத ஜீவன் (எபி7:17)

Bro. **பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நம்முடைய வாழ்க்கையைப் பற்றி நாம் நினைத்துக் கொண்டிருப்பது ஒன்று. ஆனால், தேவனுடைய வார்த்தை சொல்வது ஒன்று! பொதுவாக உலகில் முதற்பிறவியில் செய்த பாவத்தால் இப்போது அவதிப்படுகிறேன் என்று சொல்லுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். ஆனால், ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நிமிக்கப்பட்டுள்ளதை வேதம் சொல்லுவதை நாம் அறிவோம். இந்த உலகம் தான் நிரந்தரம் என்ற உணர்விலேயே அநேகர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வேதாகமம் சொல்கிறது'' **உங்கள் வாழ்க்கை (ஜீவன்) எப்படிப்பட்டது? அது கொஞ்சங் காலந்தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையை போலிருக்கிறது (யாக் 4:14).** ஆகவே, நம் வாழ்வு குறுகினது, சஞ்சலம் நிறைந்தது என்று யோபு (14:1) சொன்னது போலவே மனுஷனுடைய வாழ்வு வருத்தங்களால் நிறைந்ததாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட இந்த வாழ்க்கையில் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை வேதம் போதிக்கின்றது. விசேஷமாக நமதாண்டவர் கிறிஸ்துவினுடைய போதனைகள் நம் வாழ்வை சீரமைக்க உதவுகிறது. அதனால்தான் **நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்** என்றார் இயேசு. அழிந்து போகிற இந்த வாழ்வைப்பற்றி வேதம் மேலுமாக மாம்சமெல்லாம் புல்லை போலவும் மனுஷனுடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவும் தற்காலிகமானது என்றும், ஒரு நித்திரைக்கும், நிழலுக்கும் ஒப்பாக உள்ளது என்றும் வேதம் எடுத்துச் சொல்கிறது. ஆனாலும், மனுஷர் உலகத்தில் பேர், புகழ், செல்வம் இவற்றுக்காகவே பாடுபடுகிறான். பொருளாசையினால் அவன் இருதயம் நிறைந்து அதை நியாயப்படுத்தும் வாழ்வை விரும்புகிறான். ஆனால், அதை தேவன் கண்டித்து உணர்த்துவதை நாம் இப்போது நினைவு கூறுவோம்.

மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என்று இயேசுக் கேட்ட கேள்விக்கு இன்றைவரை

பதில் சொல்ல ஒருவனும் பிறக்கவில்லை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை, அருள் இல்லார்க்கு அவ்வுலகு இல்லை என்று தான் நம் சமுதாயம் நமக்குக் கற்றுத் தருகிறது. ஆக, இவ்வுலகில் வாழ எந்தத் தவறான வழியிலும் முயற்சி செய்து பொருளை ஈட்ட முனைகிறான் மனிதன். ஆனால், தன் வாழ்க்கையில் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல் உலகில் அவன் பெறும் பொருள் பதவி, அந்தஸ்து எல்லாமே நஷ்டம் தான் என்று வேதம் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆக, அவன் சுவிசேஷத்திற்கு ஞானஸ்நானத்தில் கீழ்ப்படியும் போது மட்டுமே அவனுடைய அழியாத ஜீவன் ஆரம்பிக்கின்றது. அதனால் தான் தேவனுக்கும் உலக எஜமான்களுக்கும் உங்களால் ஊழியம் (பின்பற்ற) செய்ய முடியது என்று ஆண்டவர் எடுத்துரைத்தார் (மத் 6:24)

எவ்வளவு தான் ஆவிக்குரிய வாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தாலும் மனுஷன் உலகப்பொருள் சேர்ப்பதிலேயே திருப்தியும், மகிழ்ச்சியும் அடைய முயல்கிறான். லூக்கா 12:15 ல் இயேசு ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்று சொல்லி ஒரு உதாரணத்தையும் சொல்கிறார். உலக ஆஸ்திகளைத் திரளாய் சேர்த்த ஒருவன் மகிழ்ந்து தன் மனதிலே களிப்புற்று இருக்கையில் தேவன் அவனைப் பார்த்து: மதிகேடனே, இன்று இராத்திரியிலே உன் ஆத்துமா உன்னிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படுமானால் இரவு நீ செத்துப் போனால் சேர்த்து வைத்தது எல்லாம் யாருடையதாகும் என்று கேட்கிறார். **தேவனிடத்தில் ஐசுவரியவனாய் இராமல்** தனக்காகவே சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார். ஒன்றான மெய் தேவனையும் அவர் அனுப்பிய இயேசுவையும் அறிவதே நித்திய ஜீவன் ( யோவா 17:3).

ஆகவே, தேவகுமாரன் இயேசுவின் இரத்தத்தால் பாவங்கள் கழுவப்பட்டு அழியாத ஜீவனை ஞானஸ்நானத்தில் பெறுகிறோம் என்றும், அதன் பின்பே சபையில் சேர்க்கப்பட்டு மெய் தேவனை ஆராதிக்க முடியும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். தேவ வசனமாகிய அபபோஸ்தலர் உபதேசம் இதை நன்றாய்ப் போதிக்கின்றது. அதன் அடிப்படையில் வரும் விசுவாசத்தினால் மாத்திரமே நீதிமான் பிழைக்க முடியும். அந்த அழியாத ஜீவனை காப்பாற்றிக் கொள்ளவே தேவன் நமக்கு சபைக்கூடுதலைக் கட்டளையிட்டு வழி நடத்துகிறார். அப்படியில்லாமல் தங்கள் செல்வத்தை நம்பி, பெருமைப்படும் ஒருவனாவது தன் சகோதரனை மீட்கும் பொருளை தேவனுக்குக்

கொடுக்க முடியாது (சங் 49:6–8). பொன், வெள்ளி சம்பதிப்பதிலும் ஞானமே முக்கியம். இங்கு ஞானம் என்பது மெய்யான தேவனை அறிந்து கொள்வதாகும்!

இயேசுவின் அற்புதத்தால் சாப்பிட்டு திருப்தியடைந்த மக்கள் அவரைத் தேடி வந்த போது இயேசு சொன்னது: அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல அழியாத ஜீவன் வரை நிலைநிற்கும் போஜனத்தையே நாடுங்கள் என்று இடித்துரைத்தார். ஆனால், இன்னும் இவ்வுலம் அப்பமல்லாததற்காக பணத்தையும், திருப்தி செய்யாதப் பொருளுக்காகப் பிரயாசத்தையும் செலவழித்துக் கொண்டிருக்கிறது ( ஏசா 55:2). ஆக, நமக்கு நித்திய ஜீவனாகிய அழியாத ஜீவனை யாவருக்கும் அளிப்பது பிதாவின் சித்தமாயுள்ளது. ( யோவா 6:40) அதை மனுஷருக்கு கொடுக்கும் அதிகாரத்தை தேவன் தம் குமாரனிடம் கொடுத்துள்ளார் ( யோ 17:2). அது நிலைத்திருக்க சபையும், சகோதர அன்பும் அவசியம் என்கிறது அப். உபதேசம். I யோவா 3:15). தாழ்மைக்கும் கர்த்தருக்கும், பலப்படுத்தலுக்கும் வரும் பலன், ஐசுவரியமும், மகிமையும் ஜீவனுமாம் ஆகவே, நாம் அனுபவிக்கிறதற்கு சகலவித நன்மைகளை சம்பூரணமாக கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைத்து (I தீமோ 6:17–19)அழியாத ஜீவனைத் தொடருவோம். கிறிஸ்துவின் கிருபை நம்மனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென். ✝

## நாளும் நடப்பும்

1. ஏப்ரல் 1 முதல் தேசிய மக்கள் தொகை பதிவுத் தொடக்கம்
2. ஐந்து மற்றும் எட்டாம் வகுப்புகளுக்கு அரசு பொதுத் தேர்வுகள் இல்லை
3. சீனாவை சுருட்டிய கொரோனா வைரஸ் உலகப் பொருளாதாரத்தை உலுக்கி வருகிறது.
4. பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் தேர்வு – பீதியில் ஆசிரியர்கள்.
5. நியூசிலாந்துக்கு எதிரான T20 கிரிக்கெட் தொடரை இந்தியா கைப்பற்றியது.